THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

செப்டம்பர்
2006

மரம் 6
கனி 10

ஆண்டு சந்தா ரூ. 50/-
தனி பிரதி ரூ. 5/-

## தெரிந்து கொள்வோம்

# ஓசன்னா – HOSANNA

யூதர்களின் கூடாரபண்டிகையின் நாட்களின் போது 'ஓசன்னா' என்று சொல்லி ஆர்ப்பரிப்பது வழக்கம். இயேசு எருசலேம் தேவாலயத்துக்குப் போகையில் அப்படியே சொல்லி ஆர்ப்பரித்தார்கள். மேலும் நெகேமியாவின் நாட்களில் தேவாலயத்தின் மதில்களை கட்டின பின் அதை பிரதிஷ்டை செய்தபொழுது பாடின சங்கீதத்திலிருந்து இந்த வார்த்தை எடுத்ததாக தெரிகிறது. 118–ம் சங்கீதம் 25–ம் வசனத்தில் "கர்த்தாவே இரட்சியும்" என்பதிலிருந்து "ஓசன்னா" வந்ததாக சொல்லப்படுகிறது. எப்படியாயினும் இது விண்ணப்பமும், துதியும் கலந்த ஒரு சொல்.

**இது பற்றிய வசனங்களில் சில:**


**மத்.21:9,15 – மாற்.11:8,10 – யோவா.12:13 – வெளி.7:10 – சங்.118:25.**

***S.Rajaprasath***


# கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி



உங்கள் WIN TV –யில்
ஒவ்வொரு வாரமும் திங்கள்.
செவ்வாய் மற்றும் வியாழன். வெள்ளி
காலை 6.15 முதல் 6.30 மணி வரை
பாருங்கள். மற்றும்




*செய்தியாளர்*

**B.அர்ஜூனன்**




உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை 49 மீட்டரில். ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்.

**THE WORD OF CHRIST**
**P.O.BOX.5**
**BATLAGUNDU -624 202 S.INDIA**
**Phone: 04543 263278 Cell: 9443558041**


"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

"The Churches Of Christ salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.


# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 6 செப்டம்பர் - 2006 கனி - 10


ஆசிரியருரை

# நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்கள்
## We are the member of his body



நாம் வாழ்கிற இவ்வுலகில் எங்களுடைய வம்சம் ராஜ வம்சம், எங்களுடைய முப்பாட்டனார் ஒரு பெரிய வணிக வியாபாரி, எண்ணிக்கைக்கு அடங்கா சொத்து எங்களுக்கு இருக்கிறது என்று தங்களைக் குறித்து மிகவும் பெருமையாக பேசிக்கொள்ளும் அநேகரைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் "நாம் அவருடைய (கிறிஸ்துவினுடைய) சரீரத்தின் அவயவங் களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" என்கிறார் (எபே.5:30). உலகப்பிரகாரமாக நாம் இன்னாரின் வாரிசு அல்லது இன்ன குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதைவிட, நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்குரிய எலும்புகளாயும் இருப்பது எவ்வளவு பெருத்த ஆசீர்வாதம்!

**பாவத்திலிருந்து மீட்பு:**

"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ.1:13,14). பாவத்தினாலே அடிமைப்பட்டு கிடந்த நம்மை பிதாவாகிய தேவன் அவருடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவமற கழுவி, பரிசுத்தப்படுத்தி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யமாகிய அவருடைய சபையிலே பிரவேசிக்கக்கூடிய பாக்கியத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

இவ்விதமாக, "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரித்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர் களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோ.1:20,21). இது அவருடைய ஈவாக இருக்கிறது. நம்முடைய பரிசுத்தத்தினாலோ அல்லது நம்முடைய நற்கிரியைகளினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை, தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார்.

**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்:**

"உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே" (1கொரி.6:15). பிரியமானவர்களே, நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களில் ஒன்றாக இருந்தால் அவருடைய சரீரத்திற்கேற்றவைகளை சிந்திக்கவேண்டும். அவைகளை வேசியின் அவயவங்களாக்கிவிடக்கூடாது. "கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்" என்ற 1கொரி.6:17 -ம் வசனத்தின்படி அவருடைய சரீரத்திலே இணைந்தவர்களாகவே இருக்கவேண்டும். சரீரம் தலையின் கட்டுப்பாட்டில் இயங்குவதுபோல சரீரத்தின் தலையாகிய கிறிஸ்துவின் கட்டுப்பாட்டில் செயல்படவேண்டும். "இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்ற எபே.5:31 (ஆதி.2:24) வசனத்தின்படி மணவாட்டியாகிய சபையானது மணவாளனாகிய கிறிஸ்துவோடு அவருடைய சரீரத்தில் உள்ள அவயவங்களில் ஒன்றைப்போல செயல்பட வேண்டும். அவரே அதன் இரட்சகர். ஆனபடியினாலே "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல;" என்றார் (மத்.10:37). சத்திய வசனத்தினாலே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்து, தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி நம்மை சம்பாதித்துக்கொண்டார். ஆகையால் நாம் கிறிஸ்துவினுடையவர் களாயிருக்கிறோம். எனவே, "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா?" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார் (1கொரி.6:19).

**உரியவர்கள்:**

உரியவர் என்றால் சொந்தக்காரர். அதனுடைய உடமைக்கு உரியவர் என்று அர்த்தம். "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே.5:30). ஆனபடியினாலே "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?..... தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1கொரி.12:13-18). அந்தப்படியாக நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தனித்தனி அவயவங்களாயிருந்துகொண்டு எல்லாவற்றையும் அவருடைய சரீரமாகிய சபையிலே செய்கிறோம். இதிலே நான் பெரியவன் நீ சிறியவன் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவனவனுக்கு தேவன் பகிர்ந்து கொடுத்தபடியாக செயல்படக்கடவன்.

"நானே திராட்சக்கொடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்" (யோவா.15:5,6). சபையில் நிலைத்திராவிட்டால் அதாவது அவருடைய சரீரமாகிய சபையில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட திராட்சக்கொடியைப்போல உலர்ந்து போவான். அவைகளின் முடிவு அக்கினிக்கு இரையாகும். எடுத்துக்காட்டாக பாருங்கள்: கையில் எலும்புமுறிவு ஏற்பட்டு மாதக்கணக்கில் ஆகி விட்டால் அதை திரும்பவும் சேர்ப்பது கூடாதகாரியம். அதைப்போல "ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முற்செடிகளையும் முற்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" (எபி.6:4-8). சரீரத்திலே முறிவு ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்படி முறிவு ஏற்படுமாயின் உடனே அதை வசனத்துடன் சரிசெய்ய


முற்பட வேண்டும். இல்லையேல் அது புரையோடி சீல் பிடித்து மாதக்கணக்கில் வைத்தியம் செய்தாலும் முடியாமற்போகும். ஆகையால் எபிரெய ஆசான் ஒரு நிலத்தை எடுத்துக்காட்டாக சொல்கிறான்: தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். அதற்கு விரோதமாக முள்பூண்டுகளை விளைவிக்கக் கூடிய நிலமோ சுட்டெரிக்கப்படும் என்கிறார். நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்?

"சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன் பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப்போடப்பட்டதென்று சொல்லுகிறாயே நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளை தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு. ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவினாலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்" (ரோம.1:17-22). அன்பானவர்களே, புறஜாதியார்களாகிய நமக்கு கிடைத்த இந்த இரட்சிப்பை விசுவாசத்தின் மூலமாக பெற்று இருக்கிறோம். மேட்டிமை சிந்தையாயிராமல் பயந்திருக்கக்கடவோம். சபையிலே நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமிருக்கிறது. "சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" (ரோம.12:10,11).

அன்பானவர்களே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலே இப்படிப்பட்ட ஆசீர்வாத்தை பெற்ற நாம் நற்கிரியை செய்து பிதாவாகிய தேவனுக்கு ஏற்ற கனிகளைக் கொடுப்போம். "நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப்பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" (கொலோ.1:9-11). நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறபடியால் உயிருள்ள சரீரமாக இருந்து செயல்படுவோம்.

# நாம் ஏன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கிறோம்
## *Why We Partake of The Lord`s Supper*

J.C.Choate



இயேசுவும் அப்போஸ்தலரும் மேல் வீட்டறையில் பஸ்காவில் பங்குகொள்ளும்படி கூடியிருக்கையில் கர்த்தருடைய பந்தியானது இறுதி விருந்தை நினைவுபடுத்துகிறது. பஸ்கா என்பது ஆட்டுக்குட்டியின் இரத்தம் எந்தெந்த வீட்டின் நிலைக்கால்களில் தெளிக்கப் பட்டிருந்ததோ அதனைக் கண்டு மரணதூதன் கடந்து சென்றதை நினைவுப்படுத்தும்படி கொண்டாடும் ஒரு வருடாந்திரப்பண்டிகையாகும் (யாத்.12). இந்தப்பண்டிகை ஒழிந்துபோனது. ஆனால் புதியஏற்பாட்டின் வருகையினால், கர்த்தருடைய ஜனங்கள் இப்போது கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுகின்றனர்.

வேதவாக்கியம், "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புதுஉடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானப்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்" (மத்.26:26-30) என்று கூறுகிறது.

மாற்கு புத்தகத்தில் நாம், "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக்கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனிநான் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்" (மாற்.14:22-26) என்று வாசிக்கிறோம்.

கடைசியாக, லூக்கா இதே விதமாகக் குறிப்பிடுகிறது. "வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி; நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைத் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (லூக்.22:14-20)

கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்படுவது பற்றிய இந்த மூன்று பதில்களில், நாம் கவனிக்க வேண்டிய அநேகக் காரியங்கள் உள்ளன. முதலாவது, முன்பு குறிப்பிடப்பட்டுள்ளபடி, இயேசு சீஷர்களுக்கு இரவு விருந்திற்கு அறிமுகப்படுத்தும்படி பஸ்காவிருந்தினை ஏற்படுத்துவதற்கு அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு அது கைக்கொள்ளப்படுமென ஒரு இரவு விருந்தை அல்லது ஒரு நினைவு விருந்தை பயன்படுத்தினார். அவர், அப்பம் அவருடைய சரீரமாயிருக்கிறது அல்லது அவருடைய சரீரத்துக்கு மாதிரியாயிருக்கிறது என்றும் அது தம்மையும் தம்முடைய பாடுகளையும் நினைவுகூரும்படிக்கு பங்கெடுக்கப்படவேண்டியது என்றும் சொன்னார். பாத்திரம், அதாவது திராட்சப்பழரசம் தம்முடைய இரத்தமாகவும் அதாவது தம்முடைய இரத்தத்திற்கு மாதிரியாயிருக்கிறதென்றும் மனுஷனுடைய பாவங்களின் மன்னிப்புக்கொன்று சிந்தப்பட்ட இரத்தமாயிருக்கிறது என்றும் அந்த இரத்தத்தை நினைவுகூரும்படிக்கு அது பங்குகொள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது என்றும் சொன்னார். நிச்சயமாக, இந்த வேதவாக்கியங்களில் அவர் பேசுகின்ற இந்த அப்பமானது, இந்த இராப்போஜனத்தில் பங்குகொண்ட போதிலும்கூட, இது கிறிஸ்வினுடைய நேரடியான சரீரமாயிராது. பாத்திரமானாலும், அதாவது பழரசம் அல்லது திராட்ச ரசமானாலும், கிறிஸ்துவினுடைய நேரடியான இரத்தமாயிராது. ஆனால் அவைகள் வெறுமனே மாதிரியாக அல்லது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் அவருடைய இரத்தமாக கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளுகிறவர்கள் நினைவுகூருகிற ஒன்றாக இருக்கும். இந்த பஸ்காவானது புளிப்பில்லா அப்பமும்

திராட்சப் பழரசமும் சேர்ந்தது என குறிப்பிடுகிறதாயிருக்கவேண்டும். கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் பஸ்காவைப் புசித்தபடியினாலும் அதே சமயம் தம்முடைய இராப்போஜனத்தை ஏற்படுத்த அவர் அப்பத்தையும் பாத்திரத்தையும் பயன்படுத்தியபடியினால், இன்னும்கூட கர்த்தருடைய பந்தியயில் நாம் பங்குகொள்ளுகையில், நாம் புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சப்பழம் அல்லது திராட்சப்பழ ரசத்தையும் கர்த்தருடைய சரீரத்தையும் கர்த்தருடைய இரத்தத்தையும் நினைவுகூரும்படிக்கு பயன்படுத்துகிறோம். இரண்டாவது, இயேசு அவர்களோடுகூட தேவனுடைய ராஜ்யத்தில் இது நிறைவேறுமளவும் இந்தப் பஸ்காவைப் புசிப்பதில்லை என்று தம்முடைய சீஷர்களிடம் சொன்னார். இது கிறிஸ்து சீக்கிரமாக காட்டிக்கொடுக்கப்படப்போகிறார் என்றும் இவ்வாறாகா உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் இரத்தஞ்சிந்தப் போகிறார் என்றும் வெளிப்படுகிறது. அதன்பின் அவர் அடக்கம் செய்யப்பட்டு மூன்று நாள் இரவுகளுக்கு பிறகு கல்லறையிலிருந்து புறப்பட்டு சீஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் சில நாட்களுக்குக் காட்சியளித்து அதன்பிற்பாடு பரலோத்திலிருக்கிற பிதாவினிடத்திற்கு திரும்பிச்சென்றார். தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டு அங்கிருந்து அது உலகமுழுவதும் பரவும். தயவுகூர்ந்து கவனியுங்கள் ஏற்றவேளையில் சபை ஸ்தாபிக்கப்பட்டபிறகு "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப்.2:42) என வாசிக்கிறோம். அப்பம்பிட்குதல் இங்கே கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் வரப்போகிற ராஜ்யம் அல்லது சபையில் சீஷர்கள் பந்தியில் பங்குகொள்கையில் கிறிஸ்து அவர்களோடு இருப்பாரென வாக்குப்பண்ணினார். நிச்சயமாக, அவர் சரீரத்தில் அவர்களோடுகூட இருக்கப்போவதாக பொருள்படுத்தவில்லை, ஆனால் அவர்களோடுகூட இருந்தார் மேலும் அவர் ஆவியில் தம்முடைய பிள்ளைகளோடுகூட இன்றும் இருக்கிறார். எங்கே இரண்டு அல்லது மூன்று பேர்கள் தம்முடைய நாமத்தில் கூடுகிறார்களோ அங்கே அவர்களோடுகூட தாம் இருப்பேன் என்று அவர் சொன்னார் (மத்.18:20). மீண்டும், அவர் எப்பொழுதும், அதாவது மரணபரியந்தமும்கூட நம்மோடே இருக்கப் போவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார் (மத்.28:20). ஆனபடியினால், சபை நிலைத்திருக்கிறது, கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குகொண்டு, அதிலே நிலைத்திருக்கையில், அவர் நம்மோடுகூட இருக்கிறார்.

இப்போது என்னோடுகூட 1கொரிந்தியர்11:23-29 க்குத் திரும்பி, அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளை வாசிப்போம், அவர் சொன்னபோது, "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கெண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு; நீங்கள்

வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய, அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" என்றார்.

தொடர்ந்து ...ர்க்கையில், நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய சில காரியங்கள் உள்ளன. முதலாவது, பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றிய தகவலை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தியிருக்கிறான். இரண்டாவது அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படிக்கு அப்பத்திலும், புதிய உடன்படிக்கையை அல்லது கிறிஸ்துவின் சட்டத்தை உறுதிப்படுத்தும்படிக்கு சிந்தப்பட்ட இரத்தமாகிய கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படிக்குப் பாத்திரத்திலும் பங்கொடுக்க வேண்டியவர்கள் என அவர் சொன்னார். மூன்றாவது அவர்கள் பந்தியில் தொடர்ந்து பங்கெடுக்க வேண்டியவர்களாக அதாவது கிறிஸ்து வரும்வரை அவரது மரணத்தை நினைவுகூரும் வண்ணமாக இருக்கவேண்டுமெனவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் எவ்வாறு தொடர்ந்து பங்கெடுப்பது? அப்போஸ்தலர் 20:7-ல் அப்பம் பிட்கும்படி துரோவாவில் காத்திருந்த கிறிஸ்தவர்களோடு பவுல் கூடி வந்ததை நாம் உதாரணமாக பெற்றிருக்கிறோம். எந்த முறை வாரத்தின் முதல் நாள் வருகிறது? ஒருவாரத்திற்கு ஒரு முறை அதாவது கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வாரத்தின் முதல் நாளிலே கூடிவரவேண்டியவர்களா யிருந்தார்கள். அவ்வாறே இன்றும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்களென்பது உண்மை. நாம் வியாழக்கிழமையில் மாதம் ஒரு முறை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இன்னும் இதுபோன்ற வேறு நாட்களில் கூடிவரும்படியான உரிமை பெற்றிருக்கவில்லை. மாறாக, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி வாரத்தின் முதல் நாள் கூடிவந்தார்களென அறிவுறுத்தப்படுகிறோம். மேலும் ஒவ்வொருவாரத்திலும் ஒரே ஒரு முதல் நாளே

இருந்தபடியால் கிறிஸ்துவை நினைவுகூரும் நோக்கத்திற்காக கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி அவர்கள் அந்நாளிலே தான் கூடிவந்தார்கள். நாம் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால் இன்னும் அதே காரியம் பின்பற்றப்படவேண்டும்.

தொடர்ச்சியாக நான்காவது, கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கையில் நாம் இரட்சிக்கப்படும்படிக்கும் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருக்கும் படிக்கும் கிறிஸ்து ஏற்படுத்திய தியாகத்தை நினைவுகூர சிலுவைக்கு நேராக திரும்புகிறோம். நாம் அப்பத்தைப் பிட்கையில் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ளோமென அறிவித்துக் கொண்டும் அதனால் நாம் அவர் எப்போது மீண்டும் வருவார் என்பதையும் அறிவுறுத்திக் கொண்டுமிருக்கிறோம்

ஐந்தாவதாக: நாம் இந்தப் பந்தியில் அபாத்திரமாய் பங்கெடுத்தால் நாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கவில்லையென்றும் நாம் என்ன செய்கிறோம் என்பதில் உண்மையுள்ளவர்களாயிருக்கவில்லையென்றும் கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் தகாதவிதமாக பயன்படுத்திய குற்றமுள்ளவர்களாகவும் இருக்கிறோம் என்பதை நாம் கண்டிப்பாக நினைவுகூரவேண்டும். இதை இன்னொரு விதத்தில் சொன்னால், கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாக பங்குகொள்வது நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்புவரும்படி புசிக்கிறோம் குடிக்கிறோம் என்று அர்த்தமாகிறது. நாம் அதில் பங்குகொள்வதற்கு முன் நாம் சரியாக இருக்கவேண்டுமென்று அர்த்தமல்ல, ஆனால் கர்த்தருடைய பந்தி நமக்கோ கர்த்தருக்கோ ஏதாவது பொருள்படுத்துமானால் அது நாம் கர்த்தரிடத்தில் கண்டிப்பாக விசுவாசமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றே பொருள்படுத்துகிறது.

மேலும் கடைசியாக, ஆறாவது கட்டத்தில், நாம் தேவனுக்கு முன்பாக நம் இருதயமும் ஜீவியமும் நீதியுள்ளதாக இருக்கிறது என்ற நிச்சயமுள்ளவராக இருக்க கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்வதற்கு முன் நாம் நம்மை நாமே நிதானித்து பார்க்க உற்சாகப்படுத்தப்படுகிறோம். நாம் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறோம் என நம்மால் முடிந்த அளவு சிறப்பானதைச் செய்கிறோம் என்று அறியும் போது மட்டும் நாம் அதில் பங்குகொள்ள வேண்டும். நாம் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறோமென கர்த்தர் நம்மில் எதிர்பார்க்கிறவற்றைச் சார்ந்து நம்முடைய இருதயத்தில் நேர்மையுடன் அறிக்கைசெய்ய முடியாவிட்டால், பிறகு கர்த்தருடைய ஜனங்களோடு வாரந்தோறும் அப்பம் பிட்கத் தொடரும்முன் நாம் நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி நம்மைக் கர்த்தர் மன்னிக்கும்படி கேட்க வேண்டும்.

என்னுடைய நண்பரே; கர்த்தருடைய பந்தியானது கர்த்தருடைய சபையில் அங்கமாயிருக்கிற ஒரு கிறிஸ்தவனுக்கு மிகவும் முக்கியமானது. இது

கிறிஸ்துவை நினைவு கூர்ந்து அவருக்கு உண்மையுள்ளவராய் நிலைத்திருக்க வேண்டும் எனப் பொருள்படுகிறது. இது ஒரு போஜனத்தைப்போல புசிப்பதற்கு அல்லது இதன் நோக்கத்தினை புரிந்துகொள்ளாமல் பங்குகொள்வதற்கு இது வெளித்தோற்றத்திற்கல்ல. இது கிறிஸ்தவனை பெலப்படுத்துவதற்கும் அதே சமயம் கர்த்தருடைய பந்தியின் மூலம் கிறிஸ்துவினிடத்திற்கு மற்றவர்களைத் திருப்புவதற்கு அவனுக்கு ஒரு வாய்ப்பளிப்பதற்கும் இது கடைபிடிக்கப்படுகிறது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கர்த்தருடைய பந்தி உங்களுக்கு என்னத்தைத் தெரியப்படுத்துகிறது? வாரத்தின் ஒவ்வொருநாளும் கர்த்தருடைய பிள்ளைகளோடு அப்பம் பிட்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிராவிட்டால், நீங்கள் கிறிஸ்தவராய்மாறும்படிக்கு உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம். கிறிஸ்துவை விசுவாசித்து உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதின் மூலமும் உங்களுடைய பாவங்களின் மன்னிப்புகென்று தண்ணீரில் அடக்கம்பண்ணப்பட்டு ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதின் மூலமும் (மாற்16:16; அப்.2:38) நீங்கள் கிறிஸ்தவராய் மாறமுடியும். நீங்கள் இதைச் செய்யும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். ஒரு கிறிஸ்தவனாக, கர்த்தருடைய குடும்பத்தின் ஒரு அங்கத்தினனாக, நீங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியைப் புசிக்கலாம். நீங்கள் கிறிஸ்தவ ஜீவியம் செய்வதால், இவ்வாறாக கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய நம்பிக்கையை உலகத்திற்கு பிரஸ்தாபப்படுத்துங்கள்.

## பொது அறிவுச் சோதனை

1. ஷாஜஹான் டெல்லி மன்னராக அரியணை ஏறிய இடம் எது?
   அ) டெல்லி ஆ) சிக்கந்தரா இ) ஆக்ரா
2. காற்றின் வேகத்தை அளக்க பயன்படும் கருவி எது?
   அ) அமினோ மீட்டர் ஆ) ஆடியோ போன் இ) அம்மீட்டர்
3. மாநிலங்களில் இரட்டை ஆட்சி ஏற்படக் காரணமான சட்டம் எது?
   அ) இந்திய சட்டம்,1919 ஆ) ரௌலட் சட்டம்,1928 இ) ஆயுதச் சட்டம்,1878
4. ஆக்ஸிஜனை கண்டறிந்தவர் யார்?
   அ) அலெக்சாண்டர் பிளமிங் ஆ) ஜே.பி. பிரீஸ்ட்லி
   இ) சார்லஸ்
5. வேறு நாட்டின் எல்லைகளால் மூன்று பக்கம் சூழப்பட்ட மாநிலம் எது?
   அ) ஜம்மு – காஷ்மீர் ஆ) மேகாலாயா இ) திரிபுரா

விடைகள்:
1. ஆக்ரா
2. அமினோமீட்டர்
3. இந்திய சட்டம் 1919
4. ஜே.பி.பிரீஸ்ட்லி
5. திரிபுரா

# வெளிப்படுத்தின விசேஷம்

## Revelation

*-Sunny David*



வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை புரிந்து கொள்ள அநேகருக்கு கஷ்டமாயிருக்கிறது. உருவக அணியில் (மறைபொருளாக) எழுதப்பட்டிருப்பதினால், அதில் சொல்லப்பட்ட காரியங்கள் எல்லாம் எளிதில் புரியமுடியாதது என்று பலர் நம்புகின்றனர்.

அந்தக் காரணத்திற்காகவே பொதுவாக வாசகர்கள் படிப்பதை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். இந்த புத்தகத்தை படிக்கும் மற்றவர்கள் உண்மையிலேயே இந்த புத்தகம் யாருக்கு எழுதப்பட்டது, எந்த சூழ்நிலையில் இந்தச் செய்தி அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பதை உணராதிருக் கிறார்கள். அடையாள மொழியில் எழுதப்பட்ட வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை உண்மையிலேயே யாருக்கு இந்தச் செய்தி ஆரம்ப காலத்தில் கொடுக்கப்பட்டதோ, அவர்களுக்கு இதைப் புரிந்து கொள்வதில் கஷ்டம் இருக்கவில்லை ஏனெனில் இந்த அடையாளங்களின் அர்த்தம் அவர்களுக்குத் தெரியும். ஆனால், இன்றோ அநேகர் தவறாகப் புரிந்து கொண்டு தவறாக இதை பிரயோகிக்கும் போது குழப்பங்கள் வருகிறது. இன்று கிளர்ச்சியூட்டும் பாங்கில் மன எழுச்சியைத் தூண்டுகிற வண்ணமாக வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தைப் போதிக்கிறார்கள். ஆகவே அநேகர் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள்.

இந்த புத்தகத்தின் முதல் பக்கத்திலேயே சொல்லப்பட்ட செய்தி, ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு சொல்லப்பட்டது என்பதை தெளிவாக காணலாம். அங்கு கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். சிறைவாசத்தில் எடுத்துச் செல்லப்பட்டனர் அவர்கள் தங்கள் மார்க்கத்தை விட்டுக்கொடுக்காததினால் அவர்களுடைய சொத்துக்களெல்லாம் களவாடப்பட்டது. அப்படிப்பட்டவர்களுக்கு நம்பிக்கையும் தைரியமும் கொடுக்கவே இந்தச் செய்தி சொல்லப்பட்டது. இந்தச் செய்தி ஏழு சபைகளுக்கு மாத்திரமல்ல, ஏனெனில் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் 7 என்கிற எண் ஒரு அடையாள மொழியில் முழுமையைக் குறிக்க அல்லது நிறைவைக் குறிக்க உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சபைகளில் இருந்த சூழ்நிலை மற்ற எல்லா கிறிஸ்துவின் சபைகளிலும் இருந்தன. ஆகவே முதல் செய்தி அவர்களுக்குதான் என்பதில் ஐயமில்லை. இருப்பினும் எல்லாக் காலத்திலும் வாழ்கின்ற தேவனுடைய பிள்ளைகளுக்கு இந்தச் செய்தி பொருந்தும்.

ரோம சக்கிரவர்த்தி டொமீஷியன், சக்கரவர்த்தியை ஆராதிக்க வேண்டும் என்று சட்டத்தை அறிமுகம் செய்தான். தன்னுடைய சிலையை ராஜ்யம் முழுவதும் எழுப்பி, எங்குமுள்ள எல்லா மக்களும் சௌகர்யமாக ஆராதனை செய்ய வழிவகுத்தான். சிலையை ஆராதிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினான். ஒவ்வொரு மனிதனும் ராயன் (சீசர்) என்ற தேவனுக்கு கொஞ்சம் தூபவர்க்கம் காட்ட வேண்டியவனாயிருந்தான்.

அப்படிச் செய்த பிறகு அந்த மனிதன் தன்னுடைய மதச்சடங்கை செய்து முடித்தால் ஒரு சான்றிதழ் பெறுவான். இதை ஒவ்வொரு ரோம பிரஜையும் செய்து விட்டு அந்த சான்றிதழைப் பெற வேண்டும் செய்யத்தவறியவன் சக்கரவர்த்தியை எதிர்த்தவனாக எண்ணப்படுவான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ரோமாபுரி பட்டணத்தில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவனுக்கு எவ்வளவு பெரிய சோதனையா யிருந்திருக்கும் என்று காண முடிகிறது. சக்கரவர்த்திக்கு தங்கள் விசுவாசத்தையும் பக்தியையும் காட்ட விரும்பும் எல்லா கிறிஸ்தவர்களும் அந்த சிலைக்கு தூபம் காட்டி "ராயனே கர்த்தர்" என்று சொல்ல வேண்டியவர்களா யிருந்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டும் கர்த்தராக இருக்கும் பொழுது எந்த உண்மையான கிறிஸ்தவனும் ராயனை ஆராதிக்கும் சடங்கை செய்ய மறுத்தனர். ஆகையினால் சட்ட விரோதிகளாக எண்ணப்பட்டனர். சக்கிரவர்த்தியை அவமதித்த குற்றத்திற்காக சிறையில் தள்ளப்பட்டு அடிக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டனர். அநேகர் கொல்லப்பட்டனர்.

"மரண பரியந்தம் உண்மையாயிருப்பவனுக்கு ஜீவ கிரீடத்தைத் தருவேன்" என்று தம்மை பின்பற்றுகிறவர்களுக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாக்குதத்தம் பண்ணியிருக்கிறார் (வெளி2:10). அதாவது மரணம் கூட அவர்கள் பற்றுறுதியிலிருந்து அசைக்க முடியாது. ஏனெனில் முடிவான வெற்றி அவர்களுக்கே அவர்கள் ஜீவ கிரீடத்தை அதாவது நித்திய ஜீவனை பரலோகத்தில் கர்த்தருடன் இருக்கும் பாக்கியத்தைப் பெறுவார்கள். அங்கு மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை (வெளி.21:4) அவர்களுடைய பகைவர்களும் துன்பப்படுத்தினவர்களும் அக்கினியும் கந்தகமும் நித்தியமாக எரியும் கடலிலே தள்ளப்படுவார்கள் (வெளி.20:10; 21:8).

இதுதான் யோவான் காலத்தில் உபத்திரவப்படுத்தப்பட்ட பரிசுத்தவான்களுக்கு அடையாளங்கள் மூலம் வெளிப்படுத்தின விசேஷ செய்தியாகும். இந்த புத்தகத்தில் அடையாள மொழியில் சொல்லப்பட்ட செய்தி, வெளிப்படுத்தின விசேஷம், யோவானுக்கு பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட உருவக அணியிலான விளக்கம். அதனுடைய சாராம்சம், கிறிஸ்து எல்லா உலக சூழ்நிலைகளின் மேலும் நித்தியமாக ஜெயங்கொள்ளுகிறவர். யோவான் காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களையும் அதற்குப்பின் வரும் சந்ததியையும் நியாயத்தீர்ப்பில் கர்த்தர் வருகை மட்டும் உயிரோடு

இருப்பவர்களையும் உற்சாகப்படுத்த எழுதப்பட்டது. சீக்கிரமாக அவருடைய பிள்ளைகளை காப்பாற்ற கர்த்தர் வருகிறார் என்பதே அந்தச் செய்தி. ஆகையினால் எந்தக்காரியத்தைக் குறித்தும் அவர்கள் பயப்பட வேண்டியதில்லை. இந்தச் செய்தியை இன்று சரியாக புரிந்து கொள்ள வேண்டுமென்றால், வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை முதல் நூற்றாண்டு சிறிய ஆசியாவுக்கு அருகில் வைக்க வேண்டும். முதலில் இந்த புத்தகத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு அர்த்தமற்றதாயிருந்திருக்குமானால் எந்த வியாக்கியானமும் சரியானது என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர்கள் பாடுபட்டார்கள் பயமுறுத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். அவர்களுக்கு இந்த நம்பிக்கையான தைரியமூட்டும் செய்தி தேவைப்பட்டது. கர்த்தர் தாமே அவர்களுக்கு வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை தந்தார். தேவன் எல்லா விரோதிகளையும் தோற்கடிக்க முடியும். யாரும் அவரை எதிர்த்து நிற்க முடியாது. அவருடைய மக்களுக்கு, அவருடைய சித்தத்தை பின்பற்றுகிறவர்களுக்கு, வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில், நம்பிக்கையின் செய்தி உண்டு. அவருக்குக் கீழ்படியாதவர்களுக்கோ அழிவுக்குரிய செய்தி உண்டு (வெளி. 2:1-8).

-நன்றி சத்தியத்தின் குரல் (The Voice of Truth)



# தேவ அன்பு
# The Love of God

மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பை பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.

வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தில் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவனுடைய இருதயத்திற்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களை பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கரை காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அன்பு.

*-Betty Burton Choate*

பாடம் - 8

# பிரசங்கிப்பதின் நோக்கங்கள்

## The Motives for Preaching

J.C.Choate

கர்த்தருடைய திட்டத்தை மக்களுக்கு தெரிவிக்கின்ற பணியிலே பிரசங்கியார் மிகவும் முக்கியமான நபர் ஆகவே நாம் அவரை நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும். நமக்குப் பிரசங்கியார்கள் தேவை மற்றும் சிறந்த பிரசங்கியார்கள் தேவை இதற்கென்றே தங்களை அர்ப்பணித்த பிரசங்கியாரை நாம் கனம் பண்ண வேண்டியது அவசியம். இந்த பாடத்தை படிக்கும்படி விசேஷித்த கவனத்தோடு நேரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

கடந்த பாடத்திலே பிரசங்கியாராவது எப்படி என்பதைப்பற்றியும் அவருடைய அழைப்பைப் பற்றியும் பிரசங்கியார் அல்லது கர்த்தருடைய தூதன் ஆகிறார் என்பதை பற்றிம் படித்தோம். இது குறித்து அற்புதமானது ஒன்றுமில்லை என்று கண்டோம். ஆனால் ஒருவர் வளர்ந்து பக்குவம் அடையும்போது கர்த்தருடைய வார்த்தையைக் கற்று அதனுடைய தாக்கத்துக்குள்ளாகி பின்பு கிறிஸ்தவனாகி கர்த்தருடைய சபையின் அங்கமாகும்போது சத்தியத்தைப் பற்றிய அறிவின் முக்கியத்துவம் அவரை மற்றவர்களுக்கு சுவிசேஷத்தைப் பொதுஇடங்களிலும் தனியிடங்களிலும் போதிக்க விரும்பச்செய்கிறது. அல்லது ஒருவர் வயதில் பெரியவராக இருந்து பிரிவினை சபையில் பிரசங்கியாராக பணிசெய்து அங்கே மனமாற்றம் அடைந்தவராக இருக்கலாம். இப்பொழுது அவர் முதன் முறையாக உண்மையான சத்தியம் என்னவென்று அறிந்து கொண்ட பிறகு அந்த சத்தியத்தை மற்றவர்களுக்குப் பிரசங்கிக்க விரும்பி பிரசங்கியாராகலாம்.

உண்மையாகவே பிரசங்கியாராவது குறித்து சொல்ல வேண்டியது அதிகமுண்டு இது ஒரு லேசான காரியமல்ல. பிரசங்கிப்பதைக் குறித்த நோக்கங்களை அதிகம் சிந்திப்பது அவசியம். ஒருவருடைய நோக்கங்கள் சரியாயிருந்தாலொழிய அவன் தேவனுக்கு ஏற்ற பிரசங்கியாக இருக்க முடியாது.

ஏன் ஒரு வாலிபன் பிரசங்கியாராக விரும்ப வேண்டுமென்று அநேகருக்குப் புரிவது இல்லை. விஷேசமாக ஏழைகள் மத்தியில் அவர்கள் அந்த இளைஞன் ஆத்துமாக்களை இரட்சிப்பதை விட தன்னுடைய வயிற்றை நிரப்பவே பிரசிங்கிக்கிறான் என்று சிந்திக்கிறார்கள். ஆகவே இளைஞனுடைய நோக்கங்களை சந்தேகித்து அவரை மதிப்பது கடினமாகிவிடுகிறது. கிறிஸ்தவம் சிறுபான்மை உடைய மதமாக இருக்கிற நாடுகளில் ஏழை மக்கள் அதிகமாக பிரசங்கியாராக இருக்கின்ற சூழ்நிலையில் பின்வரும் வார்த்தைகளில் வெளிநாட்டு பிரசங்கியார்களுக்கு சாதகமாக சொல்லுவார்கள். தன்னுடைய ஜனங்களையும் நாட்டையும் சுகமான வாழ்க்கையையும் விட்டு ஏழ்மையுள்ள நாடுகளில் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வருவதனால் மக்கள் அவர் கர்த்தருக்கு சேவைசெய்வதிலும் ஆத்துமாக்களை இரட்சிப்பதிலும் தன்னை அர்ப்பணித்திருக்கிறார் என்று நம்புகின்றனர். இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் மக்கள் அந்த வெளிநாட்டு பிரசங்கியார் தேவனுடைய வார்த்தையை நல்லது என்று எண்ணி, அவருடைய பிரசங்கத்தை ஆவலோடு கேட்கிறார்கள்.

ஆனால் அந்த பிராந்தியத்தில் உள்ள இளம் பிரசங்கியார் வளர்ந்து முதியவராகி பல வருடங்கள் ஊழியம், அர்ப்பணிப்பு, தியாகத்தின் மூலம் தாங்கள் உண்மையான பிரசங்கியார் என்பதையும் தங்கள் தலைமுடி நரைத்ததை வெளிப்படுத்துவதன் மூலமும் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ளவும் செவிசாய்க்கவும் விரும்புகிறார்கள். ஆகவே இளம் பிரசங்கியார்கள் குறிப்பாக தங்களுடைய உண்மையை நிருபிக்க வேண்டுமென்பதை புரிந்து கொள்ள வேண்டும். தாங்கள் உண்மையாயும் கடினமாக உழைத்தும் மற்ற சகோதரர்கள் மீது அன்பு செலுத்தி தாங்கள் செய்யும் பணியில் மிகவும் ஜாக்கிரதையாகவும் இருக்கிறார்கள் என்பதை காண்பிக்க வேண்டும். அவர்கள் தாங்கள் வாடகைக்கு வாங்கப்பட்டவர்கள் அல்ல என்றும், மாய்மாலக்காரர்கள் அல்ல என்றும் ஆனால் தாங்கள் உண்மையாய் மனமாற்றம் அடைந்து சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும் கர்த்தருக்கு சேவை செய்யவும் அர்ப்பணிக்கப்பட்டவர் என்பதை நிருபிக்க வேண்டும். அவனவன் கனிகளால் அறியப்படுவான் என்று இயேசு சொன்னதை நினைவு கூரவும் (மத் 7:16).

ஒரு வாலிப பிரசங்கியோ அல்லது வயதானவரோ தான் பெற்றுக் கொள்கிற பணத்துக்காக மட்டும் பிரசங்கித்தால் அது தெளிவாகத் தெரிந்துவிடும். ஒரு பிரசங்கியார் தான் செய்கிற ஊழியத்திற்காக ஊதியம் வாங்குவது பாவமல்ல "வேலையால் தன் கூலிக்குப் பாத்திரமாயிருக்கிறான்" லூக் 10:7. ஆன்மீக வேலையிலும் அது சரியானதே. ஆனால் ஒருவன் சம்பாதிப்பதற்கு மட்டுமே ஊழியம் செய்தால் தவறு அவன் கூலிக்காரன், அவன் தன்னுடைய வேலையில் வெற்றி உள்ளவனாயிருக்கமாட்டான். ஒரு சராசரி மனிதன் இவன் ஏன் பிரசங்கிக்கிறான் என்று கண்டுபிடிப்பதற்கு நீண்ட நாளாகாது.

ஒருவன் இளைஞனாக இளம் பிரசங்கியாக இருக்கின்ற காரணத்தினால் உலக நன்மைக்காக ஊழியம் செய்கின்றான் என்று அர்த்தமல்ல. ஆனால் அவன் உண்மையும், உத்தமமும், கர்த்தரிடத்தில் அர்ப்பணித்தவனாகவும் இருக்க முடியும். இயற்கையாகவே அவன் அப்படித் தான் இருக்க வேண்டும். கண்டிப்பாக அப்படியிருந்தால்தான் கர்த்தருக்கு பிரியமான வேலையை அவன் செய்ய முடியும். ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் ஏதாவது ஒரு கட்டத்தில் பிரசங்கிக்கத் தொடங்க வேண்டும். அதற்கான சிறந்த பருவம் வாலிபமே. அந்த வகையிலே தன்னுடைய வாழ்க்கை பாவத்தில் சிக்கி மீளமுடியால் போகுமுன்னே அவன் நன்றாகப் படித்து கற்று, தேவையான பயிற்சியும் பெற்றுக்கொள்ளமுடியும். எந்த ஒரு இளம் பிரசங்கியும் பின்பற்ற விரும்புகின்ற எல்லா குணங்களும் உடையவராக தீமோத்தேயு காணப்படுகிறார். ஒரு சந்தர்ப்பத்திலே பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்னது " உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு. மூப்பராகிய சங்கத்தார் உன்மேல்கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே. நீ

தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உன் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு. இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்" (1 தீமோ 4:12-16). ஒரு பிரசங்கியார் குறிப்பாக வாலிபனாயிருக்கிறவர் தான் நிராகரிக்கப்பட்டாலும் அசட்டை பண்ணப்படாமலும் தன்னை கண்டிப்பாக சரியான வழியிலே காத்துக்கொள்ள வேண்டும். மாறாக தன்னுடைய முன்மாதிரியான ஜீவியத்தினாலும் கர்த்தருக்கு உற்சாகமாக சேவை செய்வதாலும் தான், பாராட்டப்பட்டு தன்னை தெரிந்தயாவராலும் மதிக்கப்படவேண்டும். இதுவே ஒருவருடைய வாழ்க்கையின் இலக்காக இருக்க வேண்டும்.

தீத்து மற்றொரு இளம் பிரசங்கி அவன் தன்னை நற்கிரியைகளை செய்ய நம்பிக்கைக்கு உரியவனாகவும் மதிக்கப்படதக்கவனாகவும் காண்பிக்கும் பொருட்டு பின்வருமாறு எழுதுகிறார். "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளைப் பேசு. முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு...... அப்படியே, பாலிய புருஷரும் தெளிந்த புத்தியுள்ளவர்களா யிருக்கவும் நீ புத்தி சொல்லி நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக" (தீத்து 2:1-2, 6-8). இந்த விதமான பிரசங்கியாரே இன்றைக்கு நமக்குத் தேவைப்படுகிறார் குறிப்பாக இளம் பிரசங்கியார் பவுலின் புத்திமதிகளை கவனமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிரசங்கியார்கள் தங்களுக்குள் பின்வரும் நோக்கங்களை உடையவர்களாக இருக்க கூடும். பிரசங்கிப்பது எளிதான வேலை நல்ல வருமானம் கிடைக்கிறது. விசேஷமாக வெளிநாட்டு உதவி கிடைக்கிறது. நம்மை யாரும் மேற்பார்வை செய்வதில்லை. நன்றாக பிரயாணம் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. தனக்கு ஒரு பதவி இருக்கிறது என்ற பெருமையும், நான் என்கிற அகங்காரம் கொள்வது மேலும் இது போன்ற பலவற்றைக் கொண்டவராக இருக்கின்றனர்... மறுபடியும் சொல்கிறேன் தீய தவறான நோக்கங்கள் அழித்து விடும். ஒருவர் உண்மையாய் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய வேலை செய்யும்படியான ஆழ்ந்த தீர்மானத்தோடு கர்த்தர் மீதும் மனித ஆத்துமாக்களின் மீதும் அன்புள்ளவராகி கர்த்தருக்கு ஊழியம் செய்ய விருப்பமுள்ளவராக, அவருக்காக எல்லாவற்றிலும் உண்மையுள்ளவராக ஊழியம் செய்ய வேண்டும். இந்த நோக்கங்கள் ஒருவருடைய வாழ்க்கையில் காணப்பட்டு ஒரு பெரிய பிரசங்கியாராகவும், தேவனுடைய ஊழியராகவும் ஆவதற்கு உதவிசெய்யும்.

# பேசும் வேதாகமம் – 22

★ உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள் என்று எவர்களைப் பார்த்து சொன்னார்கள்? - பவுலையும், சீலாவையும் - அப்.17:6.

★ ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே எத்தனைபேர் நீதிமான்களாக்கப்படுவார்கள்? - அநேகர் - ரோ.5:19.

★ ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் எவைகளைத் தெரிந்துகொண்டார்? - பைத்தியமானவைகளைத் - 1கொரி.1:27.

★ நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற எண்ணவாய் இருந்தது? - உபாத்தியாய் - கலா.3:24.

★ இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை என்று எழுதுகிற அப்போஸ்தலன் யார்? - பவுல் - 2தீமோ.2:9.

★ முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிது; என்ன செய்யப்படுவதே அதின் முடிவு? - சுட்டெரிக்கப்படுவதே - எபி.6:8.

★ ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் யார்? - இயேசுகிறிஸ்து - கொலோ.1:18.

★ தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமலும், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் என்ன செய்து வைத்திருக்கிறார்? - அடைத்துவைத்திருக்கிறார் - யூதா 6.

★ அன்பிலே என்ன இல்லை? - பயமில்லை - 1யோவா.4:18.

★ நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் எப்படிப்பட்டவர்கள்? - பாக்கியவான்கள் - 1பேது.4:14.


ஒரே வழி

**'The One Way'** வேதபாடம்
The Master Course -ஐ அஞ்சல் வழி மூலம் படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 15-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்.
அத்துடன் 'வேதாகம சபை' என்ற புத்தகத்தையும் பரிசாகப் பெற்றுக்கொள்வீர்கள். வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

# எத்தனை நம்மை! எத்தனை இன்பம்!!

## *How Good! How Pleasant!!*

பெண்கள் பகுதி

*-J.Glory Arjunan*



எத்தனை நன்மை, எத்தனை இன்பம் சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணும் போது என்று சங்கீதக்காரனாகிய தாவீது 133-ம் சங்கீதம் 1-ம் வசனத்தில் மிக அழகாய் பாடியுள்ளார். அன்பு சகோதரிகளே, இந்த நன்மையும் இந்த இன்பமும் எப்போது வரும்? ஒருமித்து வாசம்பண்ணும் போது. ஏக சிந்தையுள்ளவர்கள் அதாவது ஒரே காரியத்தைக் குறித்த விருப்பமுள்ளவர்கள் தான் ஒருமித்து இருக்கமுடியும். இவ்விதமான ஒருமித்த சிந்தனை ஆவிக்குரிய அல்லது தேவனுக்கடுத்த சிந்தனையாயிருக்கும் போது நிச்சயமாகவே நன்மையும் இன்பமும் நம்மை சூழ்ந்து கொள்ளும். இத்தகைய சிந்தைகொண்டிருந்த இரு சகோதரிகளைக் குறித்து லூக்.1:36-56 வரை வாசிக்கலாம்.

மரியாளும் எலிசபெத்தும் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள். ஆனால் இவர்கள் தங்கள் இனம் ஜனத்தைக் குறித்த சம்பாஷனையில் ஈடுபடவில்லை. இனத்தைக் குறித்த பெருமைகளையோ அல்லது வேறு எந்த உலகப்பிரகாரமான காரியத்தை பற்றியோ சம்பாஷிக்கவில்லை மாறாக இருவரும் தேவபக்தியுள்ளவர்களாய் தேவனையே புகழ்ந்து பேசிக் கொண்டிருந்ததை இவ்வசனங்களில் வாசிக்கிறோம். தேவதூதனால் அறிவிக்கப்பட்ட படி தன் இனத்தாளாகிய எலிசபெத்து தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள் எனக் கேள்விப்பட்டு யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் (எலிசபெத்தின் கணவன்) வீட்டிற்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள் என வாசிக்கிறோம். எப்பேர்பட்ட அன்பு! முதிர்வயதாகி மலடியாயிருந்த எலிசபெத்தைக் கர்த்தர் கடாட்சித்துள்ளார் என்று கேள்விபட்டு தீவிரமாய் போய் அவளை வாழ்த்தியிருக்கிறாள். அன்பு சகோதரியே, சற்றே இக்காலத்து சகோதரிகளைக் குறித்து சிந்தித்துப்பார்ப்போம். இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறேன் எனச் சொல்லிக் கொள்ளுகிற சகோதரிகள் கூட கர்த்தர் மற்றவர்களுக்கு அருளிச் செய்யும் ஆசீர்வாதங்களைக் குறித்து பொறாமைப்படுகின்றனர். பொறுக்க அவர்களுக்கு மனதில்லாது போகிறது. பவுலுங்கூட 'என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள்' என்று ரோமர்16:11-ல் எழுதுகிறார். ஆனால் அநேகர் இனத்தாரையும் வாழ்த்துவதில்லை கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற சகோதரிகளையும் வாழ்த்துவதில்லை.

அநேகர் மற்றவர்கள் வாழ பொறுக்காதவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் கர்த்தர், "எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருக்கிறேன்" என்கிறார் (ரோமர்9:18) அப்படியிருக்க கிறிஸ்துவுக்குள் ஏக சிந்தையாயிருக்கிற யாவரும் நம் சகோதரிகளிடத்தில் உண்மையான அன்புகூரக்கடவோம். நம் இனம், ஜனம் என்று சொல்லி சுயநலமாய் வாழாமல் கிறிஸ்து, யார் எனக்கு சகோதரர்கள், யார் எனக்குத் தாயார், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத்.12:50) இந்த சிந்தை நமக்குள்ளும் இருக்கட்டும்.

பாருங்கள், எலிசபெத்து மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்தசத்தமாய்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்" (லூக்.1:41-45). ஒருவருக்கொருவர் எப்படி வாழ்த்திக்கொள்ளுகிறார்கள்! முதிர்வயதாகிய எலிசபெத்து இளையவளாகிய மரியாளை என் ஆண்டவருடைய தாயார் என்றும், பாக்கியவதி என்றும் சொல்லி வாழ்த்துகிறாள். மூத்தவளாகிய தனக்கு இந்த பாக்கியம் கிடைக்கவில்லையே, நாமும் தானே கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தோம் (வச.6) என்று பொறாமைப்படவில்லை. 'அன்புக்குப் பொறாமையில்லை' என்ற வசனத்திற்கேற்ப இருவரும் மாறி மாறி வாழ்த்துவதோடுகூட தேவனையும் மகிமைப்படுத்துகிறார்கள். அது மாத்திரமல்ல, "மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் அவளுடனே இருந்து, தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்" (வச.56) என்று வாசிக்கிறோம். அப்படியானால் கர்ப்பந்தரித்திருக்கிற எலிசபெத்துக்கு மூன்றுமாதம் உதவியாக இருந்திருக்கிறாள் அப்படி உதவியாகயிருந்த நாட்களில் தேவனைக் குறித்தும், அவருடைய மகத்துவங்களைக் குறித்தும் பேசி, தேவனை மகிமைப்படுத்தியிருக்கிறாள். "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.... வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது..... தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்;" (வச.46-54) என்றெல்லாம் சொல்லி தேவனைத் துதித்து மகிமைப்படுத்துகிறாள்.

அன்பு சகோதரிகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற உங்கள் சகோதரிகள் யாரையாவது கண்டாள் இவ்வாறு கர்த்தருக்கடுத்த காரியங்களைப் பற்றி பேசுகிறீர்களா? அல்லது உலகக் காரியங்களையும், வீணான பேச்சுகளையும் பேசி ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறீர்களா? காலஞ்செல்லாததாயிருக்கிறபடியால் காலத்தைப்பயன்படுத்திக் கொள்வோம், கர்த்தர் நமக்குச் செய்த

நன்மைகளுக்காவும், நம்முடைய சகோதரிகளுக்குச் செய்த நன்மைகளுக்காவும் ஒருமித்தவர்களாயிருந்து கர்த்தரை மகிமைப்படுத்துவோம். கர்த்தருடைய மகத்துவங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு ஒருவ்ரை ஒருவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாங்கி பலப்படுத்துவோம். அநேக நேரங்களில் ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்கள் கூட சோதனை நேரங்களில் சோர்ந்து போய்விடுகின்றனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நம்முடைய சகோதரிகளிடம் கர்த்தருடைய மகத்துவங்களையும் அன்பையும் சொல்லி ஸ்திரப்படுத்துவோம். கர்த்தர் நம்முடைய அன்பு சகோதரிகளுக்குச் செய்யும் நன்மையான காரியங்களுக்காக ஒருமனதோடுகூட கர்த்தரை மகிமைப்படுத்துவோம். சகோதரிகள் ஒருமித்து வாசம் பண்ணும்போது நன்மையும் இன்பமும் சூழ்ந்துகொள்ளும். இருதயங்களை ஆராய்ந்து அறிகிற கர்த்தருக்கு முன்பாக நம் இருதயம் செம்மையாக இருக்கட்டும். கர்த்தர் தம்முடைய நன்மையினாலும் இன்பத்தினாலும் நம்மை திருப்திப்படுத்துவாராக!

## வேதஅறிவுப்போட்டி எண் 72–ல் வெற்றிபெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| S.ராஜபிரசாத் | -மதுரை | Mrs.வனிதாசாமுவேல் | -மதுரை |
| A.சேவியர்மேரி | -மதுரை | Mrs.ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ் | -மதுரை |
| J.S.நிர்மலா ஜான் | -மதுரை | A.ஆனந்த் | -நாகமலை |
| D.யேசுதாஸ் | -சித்தூர் (A.P) | Mrs.லலிதாபிரேமகுமாரி | -மதுரை |
| P.அலிஸ்மேரி | -வத்தலக்குண்டு | | |

## வேதஅறிவுப்போட்டி எண் 72–ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. அபியத்தார் | -மாற்.2:26 | 6. வாசல்களைத் | -ஏசா.26:2 |
| 2. சாமுவேல் | -1சாமு.16:7 | 7. தேவர்களல்லாதவர்களுக்கு | - கலா.4:8 |
| 3. பேதுரு, யோவான் | -அப்.4:19 | 8. தரியு | -தானி.6:26 |
| 4. வழியின் | -எபே.11:21 | 9. மகாமேன்மையுள்ளது | -1தீமோ.3:16 |
| 5. பவுல் | -1கொரி.4:15 | 10. சபிக்கப்பட்டவன் | -மல்.1:14 |

## ஜெபியுங்கள்

- பதினைந்து மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊழியங்களுக்காக...
- அடுத்தமாதம் நடைபெறவுள்ள 24 வது வாசகர் கருத்தரங்கிற்காக...
- மாதஇதழ் வாசகர் மற்றும் தொலைக்காட்சி வானொலி நேயர்களுக்காக ...
- நாட்டிலே வன்முறை முற்றிலும் ஒழிக்கப்பட கருத்தாய்...



# கோபம் ஒரு தெரிவு
## *Anger Is A Choice*

Savador B.Cariage

வாழ்க்கை என்பது குழப்பங்கள், சோர்வுகள், ஏமாற்றங்கள் நிறைந்தது. இதுவே நமக்கு மிக எளிதாக எல்லா நேரங்களிலும் கோபமையச் செய்கிறது. நம்முடைய ஊடகம் சமுதாயம் போன்றவைகள் மிக உதவியாக இருக்கிறதில்லை. எல்லா நேரத்திலும் நீங்கள் செய்தித்தாள்களை வாசிக்கிறீர்கள், டி.வி -யைத் திருப்புகிறீர்கள், அல்லது சினிமா பார்க்கிறீர்கள், அங்கே வன்முறைச் சம்பவங்கள் இல்லாத காட்சியை காண்பிக்கிறது மிகக் கடினம். கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவை மிகவும் சாதாரணமாகிக் கொண்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு ஒரு ஏழு வயது சிறுவன் (பிலிப்பைன்ஸில்) தன்னுடைய பெற்றோர் இல்லாதபோது தன்னைக் கவனித்துக் கொள்ளும் ஒருவரை டி.வி சேனல்களை மாற்றியதற்காக சுட்டு விட்டதைப்பற்றி வாசித்தோம். அவன் பார்த்துக் கொண்டிருந்த அந்த நிகழ்ச்சி 'ROBOCOP' என்ற நிகழ்ச்சியாகும். அந்தச் சிறுவன் கட்டுக்கடங்கா கோபத்தினை தனக்குள் கொண்டிருந்ததைக் காவலர் கவனித்தார்.

நம்முடைய குழந்தைகள் சிறுவதிலேயே அதிகப்படியான கோபங்கொள்ளுகையில், நம்முடைய சமுதாயம் அதை உற்றுநோக்க வேண்டியது மிக அவசியமான தேவையாயிருக்கிறது. வேதாகமம் இந்தப் பிரச்சனைக்கு ஞானத்தையும் தீர்வையும் அளிக்கிறது.

1. வேதம், "கோபங்கொண்டாலும் உங்கள் கோபத்தில் பாவஞ்செய்யாதீர்கள்" என்கிறது. வேறு வார்த்தையில், அது உங்களை மேற்கொள்ளவிடாதீர் என்பதாகும். உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கோபம் உங்களைக் கட்டுப்படுத்த இடமளிக்காதீர்கள்.

2. வேதாகமம், "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" இவ்வசனத்தின் அர்த்தமாவது "உங்கள் இருதயத்தில் உள்ள எரிச்சல் தணியக்கடவது" என்பதாகும். உங்கள் எரிச்சல் உங்களை மேற்கொள்ளுவதற்கு முன் உங்கள் எரிச்சலை சீக்கிரமாய் மேற்கொள்ளுங்கள் எனக் கூறுகிறது.

3. வேதாகமம் மன்னிக்கச் சொல்லுகிறது. "நான் உங்களை மன்னித்திருக்கிறதைப் போல மன்னியுங்கள்" என இயேசு கிறிஸ்து கூறுகிறார். உங்கள் எரிச்சல் உங்களை விட்டு அகலக்கடவது. விருப்பத்தோடே புண்படுத்துதலைத் தாங்கிக் கொள்ளுங்கள், கிரயம் செலுத்துங்கள் - அதுவே மன்னிப்பாகும்.

நீங்களாகவே சரிபார்த்துக் கொள்ளவும், தேவன் கோபத்தைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார் எனக் கற்றுக் கொள்ளவும் வேதாகமத்திலுள்ள பல வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கோபங் கொள்ள அல்லது கோபங்கொள்ளாமலிருக்க நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது சரியானவற்றைத் தெரிந்துகொள்ளவும்!

மாற்கு டுவைன், என்பவர், "மன்னிப்பு என்பது கீழே விழுந்து நசுக்கப்பட்டிருக்கிற பல வண்ணப்பூக்களின் நற்கந்தம் போன்றது" என்றார்.

(வேதவாக்கியங்கள்: எபே.5:26-32; ரோமர்12:9-21; நீதி.14:29,19:11; மத்.6:14; மாற்3:28; 1யோவா.1:9; மாற்.11:25; லூக்.17:4; கொலோ.3:13; யாக்.5:16; 1கொரி.13).

கோபம் உங்களை பிரச்சனைக்குள்ளாக்கி அங்கே பெருமை உங்களைத் திருப்திப்படுத்துகிறது

*-The Voice of Truth International*

# நற்கிரியை

- ✤ நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரண முடையவர்களாயும், சகல வித **நற்கிரியைகளிலும்** பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக.... 2கொரி.9:8.
- ✤ **நற்கிரியைகளை** செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு.... எபே.2:10.
- ✤ உங்களில் **நற்கிரியையைத்** தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தமும் முடிய நடத்தி வருவாரென்று நம்பி.... பிலி.1:5.
- ✤ எல்லா நல் வசனத்திலும் **நற்கிரியையிலும்** உங்களை ஸ்திரப்படுத்துவாராக 2தெச.2:17.
- ✤ நன்மைசெய்யவும் **நற்கிரியைகளில்** ஐசுவரியவான்களாகவும் தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக் கவும்...... 1தீமோ.6:18,19.
- ✤ நீயே எல்லாவற்றிலும் உன்னை **நற்கிரியைகளுக்கு** மாதிரியாகக் காண்பித்து, தீத்து2:7.
- ✤ தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் **நற்கிரியைகளைச்** செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக் குறித்துத் திட்டமாய்ப் போதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்; தீத்து3:8.
- ✤ நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக **நற்கிரியைகளைச்** செய்யப் பழகட்டும் தீத்து3:14.
- ✤ அன்புக்கும் **நற்கிரியைகளுக்கும்** நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து.... எபி.10:24.
- ✤ ....உங்கள் சகலவித **நற்கிரியையிலும்** சீர்பொருந்தினவர் களாக்குவாராக..... எபி.13:21.

M.இராஜாமணி

# வேதாகம ஆலோசனை

**"இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதை பொருள்களையும் அறிந்துகொள்வான்" (நீதி.1:4-6)**

## வேதாகம ஆராய்ச்சி பாடம்-4

### 2. சபையின் வேலை என்ன?

**சுவிசேஷத்தை அறிவிப்பது:** முதல் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபையில் முதல் பிரசங்கியார் அல்லது சுவிசேஷகர் அப்போஸ்தலனாகிய பேதுரு அவர் எழுந்து அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் பேசும்போது 3000 பேர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் (அப்.2:41). இந்த வேலையை முதல் நூற்றாண்டு சபை தாமதமில்லாமல் செய்தது.

**திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் விசாரிப்பது:** திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் சபையிலே இருந்தால் அப்படிப்பட்டவர்களை விசாரித்து அவர்களுக்கு வரக்கூடிய கஷ்டங்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும், வியாதிகளிலிருந்தும், அவர்களை காப்பாற்ற வேண்டும். இதை முழு திருச்சபையும் பொறுப்பெடுத்துச் செய்யவேண்டும். இதுவே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது என்று யாக்.1:27-ல் வாசிக்கிறோம். அதைப்போல சரீர குறைபாடு உள்ளவர்களையும் நாம் நேசித்து அவர்களுக்கும் நன்மை செய்யவேண்டும். "ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம்" *(கலா.6:10).*

**ஊழியரை தாங்கவேண்டும்:** "திருவசனத்தில் உபதேசிக்கப் படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்" *(கலா.6:6).* உபதேசிக்கிறவர்கள் முதலாவது திருச்சபையை ஆரம்பிக்கும்போது ஒரு சில ஆத்துமாக்களை வைத்து மிகவும் கடினப்பட்டு சபையை உருவாக்கியிருப்பார்கள். அப்படிப்பட்ட சுவிசேஷகர்களை எல்லாவிதத்திலும் கனம் பண்ணவேண்டும். இது சபையார்மேல் விழுந்த கடமை. விசுவாசிகள் தங்கள் குடும்பத்தின் தேவைக்கு வேலை செய்கிறார்கள். ஆனால் ஊழியர் சபையின் முழுக்குடும்பத்துக்கும் அதனுடைய ஆவிக்குரிய தேவைகளை அறிந்து பாடுபடுகிறார். "அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்மென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" **(1கொரி.9:14).**

சிறுவர் பகுதி

# இரண்டுவிசை தரிசனம்

வேத பகுதி: 1தீமோத்தேயு1:19,20



அன்பான தம்பி தங்கைகளே சாலொமோன் ராஜாவை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? அவர்தான் எருசலேமின் தேவாலயத்தைக் கட்டினார். அவர் இந்த ஆலயத்தை 7 வருஷத்தில் கட்டிமுடித்தார். அவர் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் 40 வருஷம் அரசாண்டார். 13 வருஷத்தில் அரண்மனையையும் கட்டிமுடித்தார். 3000 நீதிமொழிகளையும், 1005 பாட்டுகளையும் எழுதினார். அவருக்கு பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்.

சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார். அன்பான பிள்ளைகளே இந்த சாலொமோனை கர்த்தர் இப்படி எச்சரித்திருந்தும் வழிவிலகிபோனான். இவனுக்கு அதிகமான ஞானத்தைக் கொடுத்து, அத்தோடு செல்வத்தையும் கொடுத்திருந்தார். இவனோ ஒன்றுக்கும் உதவாத விக்கிரகத்தை பின் பற்றி சோரம்போனான். நீங்கள் இவனைப்போல போய்விடாதபடி கர்த்தருக்குள் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்**

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்"

(யாத்திராகமம் 20:3)

## வேத அறிவுப் போட்டி எண்.73

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

***கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. ஆபிராம் எல்லாவற்றிலும் யாருக்கு தசமபாகம் கொடுத்தான்?
2. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவர் யார்?
3. உம்முடைய வலது பாரிசத்திலிருக்கிற ஆண்டவர், தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களை வெட்டுவார் என்று பாடின தாசன் யார்?
4. நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி என்று பவுல் யாருக்கு எழுதுகிறார்?
5. சகல பிரயாசத்தினாலும் என்னவுண்டு; உதடுகளின் பேச்சோ எதை மாத்திரம் தரும்?
6. யூதர்கள் எதைக் கேட்கிறார்கள்? கிரேக்கர் எதைத் தேடுகிறார்கள்?
7. வேசிப்பணயத்தையும், நாயின் கிரயத்தையும், எந்தப் பொருத்தனையினாலாகிலும் உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கொண்டுவராயாக; அவைகள் இரண்டும் உன்தேவனாகிய கர்த்தருக்கு எப்படிப்பட்டவைகள்?
8. நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், எது உங்களை மேற்கொள்ள மாட்டாது?
9. ராஜாவாகிய யோவாஸ் நாட்களில் மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்த தீர்க்கதரிசி யார்?
10. அப்போஸ்தலர்களாலும் மூப்பர்களாலும் கட்டளைபெறாத சிலர்..... நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்று சொல்லி,..... ஆத்துமாக்களை என்ன செய்தார்கள்?


## நடப்புச் செய்திகள்

- இந்தியா முழுவதும் தபால்காரர்களின் சீருடைகாக்கிக்கு பதிலாக அனைவரையும் கவரும் வகையிலான வேறு வண்ணத்துக்கு மாறுகிறது.
- சீனாவில் இளைஞர்களிடம் பிளாஸ்டிக் சர்ஜரிமோகம் அதிகரித்துவருவதாக சீனப்பெண்டாக்டர் லியுயான்குவான் தெரிவித்துள்ளார்.
- பாண்டிச்சேரி என்ற பெயர் "புதுச்சேரி" ஆக மாற்றப்பட்டது. இதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.
- தொடர்ந்து இலங்கையில் இருந்து அகதிகள் வருகை அதிகரிப்பு.
- நடப்பு நிதி ஆண்டின் வரி வசூல் மூலம் மத்திய அரசுக்கு ரூ.69,000 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

Owned and Published by B. Arjunan from
17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and
Printed by R. Sathiyamoorthi at Bharathi Press,
14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202. Editor : B. Arjunan.


Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR/DDL/164/2006-2008 Licensed to
Post without prepayment License No. TN/WPP-25/SR/2006-2008
Posted at Batlagundu Post Office on 10th September 2006

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.




கிறிஸ்துவின் சபை
17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம் போன் : 04543 - 263278 செல் : 9443558041
E-mail : thewordofchrist@sancharnet.in

கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை




திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில் உங்கள் WIN TV-யில் ஒவ்வொரு வாரமும்
காலை 6-15 முதல் 6-30 மணிவரை பாருங்கள்
மற்றும்



உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவையில்
SW 49 மீட்டரில் ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00
மணிவரை கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்.

**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் ஆண்டு சந்தா**
ஆண்டு சந்தா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

**Monthly Magazine**

To

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India